பக்கங்கள் 14+3

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 02 புதன்கிழமை 17.12.2025 | அதிர்வு 140

## 2 நாள்கள் கூடும் நாடாளுமன்றம்

நாளை கூட்டப்பட்டுள்ள நாடாளுமன்றம் நாளைமறுதினமும் கூட விருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

02▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# அநுரவின் தலைமையில் இலங்கை மிக விரைவில் வழமை நிலைக்கு!

## சீனா நம்பிக்கை; பூரண ஒத்துழைப்பு வழங்குவோம் என்றும் உறுதியளிப்பு

டித்வா சூறாவளியால் எதிர்கொண்டுள்ள சவால்களைத் தோற்கடித்து இலங்கை மக்களின் அன்றாட வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான அரசாங்கத்தின் திட்டத்திற்கு அதிகபட்ச ஆதரவை வழங்குவதாகவும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் இலங்கை மிக விரைவில் மீண்டெழும் என்றும் சீன மக்கள் குடியரசின் தேசிய மக்கள் காங்கிரஸ் உப தலைவர் தெரிவித்தார்.

02▶



# மட்டு. மேல் நீதிமன்றில் சரணடைந்த அம்பிட்டிய தேரர் பிணையில் விடுவிப்பு

(கனகராசா சரவணன்)

தமிழ் மக்களை வெட்டிக் கொல்ல வேண்டும் எனக் கூறிய சம்பவம் தொடர்பாக நீதிமன்ற பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் இன்று சரணடைந்ததை அடுத்து அவரை ஒரு இலட்சம் ரூபா இருவர் கொண்ட ஆள் பிணையில் செல்ல அனுமதித்து உத்தரவிட்டு 2026ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதி வழக்கை நீதிபதி ஒத்திவைத்தார்.



மேற்படி தேரர் கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23ஆம் திகதி ஊடகங்களுக்கு சுமண ரத்ன தேரர் வழங்கிய செவ்வியின்போது வடக்கில் உள்ள தமிழ் மக்களையும் தெற்கில் உள்ள தமிழ் மக்களையும் வெட்டிக் கொல்ல வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

இந்த தேரர் தெரிவித்த இந்த வன்முறையான கருத்துக்கு எதிராக சிவில் மற்றும் அரசியல் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் கீழ் உள்ள சட்டத்தின் அடிப்படையில் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

02▶

20ஆவது வருடத்தில் Tamil one TV
Voice of Tamil Canadians

ஒன்றாக முன்னோக்கி

Tamil one TVஇன் பயணத்திற்கு தொடர்ந்து ஆதரவு வழங்கிவரும் அனைவருக்கும் நன்றி

அடுத்த தசாப்தத்திற்கான பயணத்தில் ஊடகப் பங்காளர்களாக,
கல்வி | வறுமை ஒழிப்பு | பொருளாதாரம் | அரசியல் | விளையாட்டு | கலை | கலாசாரம்
என்பவற்றில் 'ஒன்றாக முன்னோக்கி' செல்ல நாம் ஒன்றிணைவோம்.

Vision 2030- ஒன்றாக முன்னோக்கி | tamil one | முரசு | வணக்கம் | Ceylon MURASU | VTV

# கோர விபத்தில் தாயும் 2 வயது மகனும் மரணம்

தெஹியத்தகண்டிய, முவகம்மன பகுதியில் பஸ்ஸும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் 33 வயதுடைய பெண்ணும், அவரது 2 வயது மகனும் உயிரிழந்துள்ளனர்.

ஓட்டோவில் ஒரே குடும்பத்தை சேர்ந்த நான்கு பேர் பயணித்துள்ளனர்.

விபத்தில் தந்தை மற்றும் இரண்டாவது மகன் ஆகியோர் தீவிர சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# 'பேரிடரை எதிர்கொள்ளல்: நல்லூரில் வெள்ளம்' இடர்கால ஏற்பாடு குறித்த கருத்தமர்வு நிகழ்வு!

யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவின் ஏற்பாட்டில் "பேரிடரை எதிர்கொள்ளல்: நல்லூரில் வெள்ளம்" என்ற தொனிப்பொருளில் அமைந்த கருத்தமர்வு ஒன்று எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவின் தலைவர் திருமதி மைதிலி ரவீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தமர்வில் "பருவநிலை மாற்றமும் வெள்ளப் பெருக்கும்" என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழகப் புவியியல் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா கருப்பொருளுரை ஆற்றவுள்ளார்.

இந்த நிகழ்வில் "மௌனம் கலைதல்" என்ற செயல்விளக்க அரங்கு, குழுநிலைக் கருத்தமர்வு ஆகிய நிகழ்வுகளும், பொதுமக்கள் பங்கேற்கக் கூடிய வகையில் கருத்தறியும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

பேரிடரை எதிர்கொள்ளல் என்ற குழுநிலைக் கருத்தமர்வில், யாழ். பல்கலைக்கழக விலங்கியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் கணபதி கஜபதி, புவியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர்களான கலாநிதி ஏ.அன்ரனிராஜன், கலாநிதி பிரதீபா விபுலன், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் வடக்குக்கான உதவிப் பொது முகாமையாளர் ஏந்திரி. ஏகாம்பரநாதன் ஜெகதீசன், யாழ். மாநகர சபையின் தலைமைப் பொறியியலாளர் ஏந்திரி இராசையா சுரேஸ்குமார், நீர்ப்பாசனப் பொறியியலாளர் ஏந்திரி. குணராஜ் சுஜீவன் மற்றும் நல்லூர் பிரதேச உதவிப் பிரதேச செயலாளர் இராமலிங்கம் சிவகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### அநுரவின்...

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சீன மக்கள் குடியரசின் தேசிய மக்கள் காங்கிரஸ் உப தலைவர் WANG DONGMING உள்ளிட்ட தூதுக் குழுவினர் இன்று காலை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்த போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை எதிர்கொண்ட மிக மோசமான பேரழிவு குறித்து தனது ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்த உப தலைவர், பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு நிவாரணம் வழங்க சீன அரசாங்கம் துரித நடவடிக்கை மேற்கொண்டதாகவும் குறிப்பிட்டார்.

அத்தோடு இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான நீண்டகால பொருளாதார, கலாசார மற்றும் இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்துவதே இந்த விஜயத்தின் நோக்கம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த அனர்த்த சமயத்தில் இலங்கைக்கு வருகை தந்தமை தொடர்பில் உப தலைவர் உள்ளிட்ட தூதுக் குழுவினருக்கு ஜனாதிபதி அநுரகுமார நன்றி தெரிவித்தார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க சீனா இலங்கைக்கு வழங்கிய பொருள் மற்றும் நிதி உதவியையும் அவர் மனப்பூர்வமாக பாராட்டினார்.

குறிப்பாக சேதமடைந்த ரயில் கட்டமைப்பை மீளமைப்பதற்கும் புனரமைப்பதற்கும் தேவையான தொழில்நுட்ப உதவியை வழங்குமாறு ஜனாதிபதி ஜி ஜின்பிங் உள்ளிட்ட சீன அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுப்பதாக ஜனாதிபதி அநுரகுமார தெரிவித்தார்.

அத்தோடு இலங்கை எதிர்கொண்ட அனர்த்த நிலைமை மற்றும் மறுசீரமைப்பு முன்னெடுப்புகள் குறித்து சீனப் பிரதிநிதிகளுக்கு ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதே அரசாங்கத்தின் பிரதான பிரயத்தனமாக இருந்தாகவும் பின்னர் அவர்களை பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்து உணவு மற்றும் சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகளை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். அவர்களின் இயல்பு வாழ்க்கையை வழமை நிலைக்குக் கொண்டுவருவதற்காக திட்டமிடப்பட்ட வகையில் பணியாற்றி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

### 2 நாள்கள்...

சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் இன்று நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இது பற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டது.

டிசம்பர் 18ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு நாடாளுமன்றம் கூடவிருப்பதுடன், திடீர் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான ரூ. 500 பில்லியனுக்கான குறைநிரப்பு மதிப்பீடு அன்றையதினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும்.

இதனைத் தொடர்ந்து மோசமான காலநிலையின் தாக்கத்தால் அனர்த்தம் ஏற்பட்ட பின்னர் நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து ஆளும் தரப்பினரால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு விவாதம் பி.ப 5.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

டிசம்பர் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 5.30 மணிவரை நாடாளுமன்ற அமர்வு இடம்பெறவிருப்பதுடன், அன்றைய தினம் ரூ. 500 பில்லியனுக்கான குறைநிரப்பு மதிப்பீடு விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்படவுள்ளது.

### மட்டு. மேல் நீதிமன்றில்...

வழக்கு விசாரணைக்கு நீதிமன்றத்தில் தொடர்ந்து ஆஜராகாத நிலையில் அவரைக் கைது செய்யுமாறு கடந்த 15 ஆம் திகதி மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் நீதிமன்றம் பிடிவிறாந்து பிறப்பித்து வெளிநாட்டுப் பயணத் தடைவிதித்து மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து தேரருக்கு மட்டக்களப்புமேல் நீதிமன்றம் பிடிவிறாந்து வழங்கியதையடுத்து தேரர் இன்று 3 சிரேஷ்ட சட்டத்தரணிகளுடன் முன்நகர்வு பத்திரம் ஊடாக மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ரி.ஜே. பிரபாகரன் முன்னிலையில் சரணடைந்ததையடுத்து நீதிபதி தேரரை ஒரு இலட்சம் ரூபா கொண்ட இருவர் கொண்ட சரீரப் பிணையில் செல்ல அனுமதித்ததுடன் எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார்.

அதேவேளை, பௌத்த தேரர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட 50 பேர் கொண்ட பெரும் படையுடன் நீதிமன்றத்துக்கு இன்று அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பழைய பூங்காவில் உள்ளக விளையாட்டரங்கு அமைய முஸ்லிம் மக்கள் ஒருபோதும் அங்கீகரிக்கமாட்டார்கள்!

## யாழ். மாநகரசபை அமர்வில் உறுப்பினர் என்.எம்.அப்துல்லாஹ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் உள்ளக விளையாட்டு அரங்கம் அமைவதை யாழ். முஸ்லிம் மக்கள் ஒருபோதும் அங்கீகரிக்கமாட்டார்கள் என்று இன்றைய சபை அமர்வில் யாழ். மாநகரசபை உறுப்பினர் என்.எம்.அப்துல்லாஹ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் வி.மதிவதனி தலைமையில் மாநகர சபா மண்டபத்தில் இன்று மாநகரசபையின் மாதாந்த பொதுக் கூட்டம் இடம்பெற்றது.

இதன்போது "யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் கட்டுமானங்களைத் தடை செய்ய கோரல்" பிரேரணையைப் பிரதி முதல்வர் இ.தயாளன் முன்வைத்து உரையாற்றினார்.

இந்தப் பிரேரணையை ஆதரித்து உரையாற்றும் போதே என்.எம்.அப்துல்லாஹ் இவ்வாறு குறிப்பிட்டார். இதன் போது மேலும் தெரிவிக்கையில்,

1975 - 2025 வரையான கடந்த 50 வருட காலத்தில் யாழ்ப்பாணத்தில் குறிப்பிடத்தக்க அளவு அபிவிருத்தி செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவில்லை என்பது உண்மை. அதற்கான பிரதான காரணம் யாழ்ப்பாண மக்கள் அதி



நவீன நகரமயவாக்கல் ஊடாகத் தமது இயற்கையை அழித்துவிடும் எண்ணம் கொண்டவர்கள் அல்லர் என்பதேயாகும்.

இதனை இங்கிருக்கும் அரசியல்வாதிகளும் அரசும் அபிவிருத்தி முகவர்களும் புரிந்துகொள்வது அவசியமாகும்.

நகரமயவாக்கல் என்பதன் ஊடாக உலகளவில் இயற்கை சூழ்நிலைகள், மக்களின் இயல்பான வாழ்வொழுங்குள் எந்தளவுக்கு சவால்களுக்கும் அழிவுகளுக்கும் உள்ளாக்கப்பட்டிருக்கின்றன என்பதை நாம் எல்லோருமே அறிவோம்.

எனவே அபிவிருத்தி என்ற பெயரில் யாழ். மாவட்டத்தின் இயற்கை சமநிலையை குழப்பியடிக்கும் எந்தவொரு செயற்பாட்டுக்கும் யாழ்ப்பாண முஸ்லிம் மக்கள் துணைபோகமாட்டார்கள் என்பதை மிகவும் தெளிவாகவும் உறுதியாகவும் தெரிவிக்க விரும்புகின்றோம்.

தற்போது உள்ளக விளையாட்டு அரங்கத்தைப் பழைய பூங்காவில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ள எண்ணத்தை மாற்றியமைத்து, வேறு பொருத்தமான இடத்தை யாழ். மாவட்ட செயலகத்தின் துணையோடு அதிகாரிகளும் அபிவிருத்தி முகவர்களும் தேடிக்கொள்ள முடியும். அதற்கான ஒத்துழைப்புக்களைப் பொதுமக்களும் நல்குவார்கள்.

அதைவிடுத்து பழைய பூங்கா அமைந்திருக்கும் பிரதேசத்தில் அதனை அமைப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளை எம்மால் வரவேற்க முடியாது. அவசியம் ஏற்படின் இந்த விடயம் தொடர்பில் நாமும் நீதிமன்றத்தை நாடுவோம் என்பதை மிகவும் உறுதியாகவும், வெளிப்படையாகவும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.- என்றார்.

# நாட்டின் பல பகுதிகளில் விபத்து; பெண் உட்பட 6 பேர் உயிரிழப்பு!

(உடப்பு க.மகாதேவன்)

நாட்டின் பல பகுதிகளில் இடம்பெற்ற வீதி விபத்துகளில் பெண் ஒருவர் மற்றும் இரு இளைஞர்கள் உட்பட ஆறு பேர் உயிரிழந்துள்ளனர்.

சிலாபம், குளியாப்பிட்டி, புல்மோட்டை, தவுலகல, மிகிந்தலை மற்றும் சிகிரியா ஆகிய பொலிஸ் பிரிவுகளில் இந்த விபத்துகள் இடம் பெற்றுள்ளன. சிலாபம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொழும்பு - சிலாபம் பிரதான வீதியின் மைக்குளம் பகுதியில், இலங்கை போக்குவரத்து சபை பஸ்ஸில் பயணித்த பயணி ஒருவர் பஸ் முன் கதவிலிருந்து தவறி விழுந்து அதே பஸ்ஸில் சிக்குண்டதில் விபத்து சம்பவித்துள்ளது. விபத்தில் படுகாயமடைந்த பயணி சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் சிலாபம் பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய நபர் ஒருவராவார்.

இதேவேளை, குளியாப்பிட்டி - ஹெட்டிபொல வீதியின் கரகஹகெதர பகுதியில், கார் ஒன்று எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியது. அந்தக் கார் மின்சாரக் கம்பத்திலும் மோதி விபத்துக்குள்ளானது. விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்தியவர் அதன் பின்னால் பயணித்தவர் மற்றும் கார் சாரதி ஆகியோர் சிகிச்சைக்காக குளியாப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.



இந்த நிலையில், மோட்டார் சைக்கிளில் சென்ற பெண் உயிரிழந்தார். உயிரிழந்தவர் முனமல்தெனிய பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய பெண்ணாவார்.

புல்மோட்டை, போகஸ் சந்தி வீதியின் 14 ஆம் கட்டைப் பகுதிக்கு அருகில், மோட்டார் சைக்கிள் ஒன்று எதிரே வந்த கொள்கலன் ஏற்றிச் சென்ற லொறியுடன் நேருக்கு நேர் மோதி விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் புல்மோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் மகாசென்புர பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபராவார்.

தவுலகல - பிலிமத்தலாவ பிரதான வீதியின் பமுனுவ பகுதியில் தனியார் பஸ்ஸில் பயணித்த பெண் பயணி ஒருவர் பஸ்ஸில் இருந்து இறங்க முற்பட்ட போது, தவறி விழுந்து விபத்து சம்பவித்துள்ளது. விபத்தில் காயமடைந்த குறித்த பெண் பமுனுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். உயிரிழந்தவர் 75 வயதுடைய வயோதிபப் பெண்ணாவார்.

மாத்தளை சந்தி - கல்குளம் வரையான வீதியின் குருந்தன்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி கவிழ்ந்ததில் விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். உயிரிழந்தவர் அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞராவார்.

இதேவேளை, தம்புள்ளை - ஹபரணை வீதியின் திகம்பத்தஹ பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று கெப் ரக வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட போது, குறித்த கெப் வாகனமும் மோட்டார் சைக்கிளும் வீதியைக் குறுக்காகக் கடந்த காட்டு யானை ஒன்றுடன் மோதி விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர், கெப் வாகன சாரதி மற்றும் அதன் உதவியாளர் ஆகியோர் காயமடைந்து சிகிச்சைக்காக தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மோட்டார் சைக்கிளில் சென்றவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் திகம்பத்தஹ பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞராவார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ரெலோ எங்கு நிற்கின்றது?

தமிழ்த் தேசியப் பேரவையின் (சைக்கிள் அணியின்) தமிழக அரசியல் பயணம் குறித்து கருத்துத் தெரிவித்த ரெலோவின் பேச்சாளர் சுரேந்திரன், "வராத ஒன்றை எதிர்ப்பதற்காகத் தமிழ்த் தேசியப் பேரவையின் தமிழ்நாட்டுப் பயணம் அமைவது அர்த்தமற்றது. அதற்கு மாறாக, தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு வழங்கப்படுவதை உறுதி செய்யுமாறு தமிழக அரசியல் பிரமுகர்களை வலியுறுத்தும் நோக்கில் அவர்களது பயணம் அமைவது பொருத்தமாக இருக்கும்." - என்று குறிப்பிட்டிருக்கின்றார். அதற்கும் அப்பாலும் அவர் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார்.

"அந்த 'ஏக்கிய ராஜ்ஜிய' அரசியல் யாப்பில் குறைகள் உள்ளன எனத் தெரிவித்து ரெலோ ஏற்கனவே அதை நிராகரித்திருந்தது. அது ஒரு மாதிரி வரைவாக இருந்ததே தவிர, இறுதி வரைவாகக் கொண்டு வரப்படவில்லை" - என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

அதை ஒட்டி இரண்டு விடயங்களைச் சுட்டிக் காட்டுவது கட்டாயமானதாகின்றது. இவ்விடயத்தில் தமது தமிழக அரசியல் பயணம் தொடர்பாக தமிழ்த் தேசியப் பேரவையின் அறிவிப்பு நோக்கப்பட வேண்டும்.

"தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வாக சிறீலங்கா அரசு 'ஏக்கிய ராஜ்ஜிய' அரசியல் யாப்பினை திணிப்பதற்கான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்நிலையில், அதனைத் தடுத்து தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக தமிழர் தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையிலான சமஷ்டி அரசியல் யாப்பினை கொண்டுவருவதற்கான அழுத்தங்களை சர்வதேச சமூகம் கொடுக்க வேண்டும். அந்த வகையில் பிராந்திய வல்லரசாகிய இந்திய அரசு இலங்கை மீது அழுத்தங்களை ஏற்படுத்த வேண்டும். அவ்வாறான நிலையை ஏற்படுத்தத் தமிழக அரசியல் தலைவர்கள் குரல்கொடுக்க வேண்டிய அவசரதேவை எழுந்துள்ளது. இந்நோக்கத்திற்காக தமிழக அரசியல் தலைவர்களைச் சந்தித்து இவ்விடயங்களை தெளிவுபடுத்தி, அவர்களது ஆதரவை பெற்றுக் கொள்ளும் நோக்கில் சென்னை சென்று அரசியல் தலைவர்களுடன் இவ்வாரம் சந்திப்புக்களில் ஈடுபடவுள்ளோம்." - என்பதுதான் அறிக்கை. எனவே சமஷ்டி தீர்வை வலியுறுத்தி ஆதரவு திரட்டுவதும் சைக்கிள் அணியினரின் தமிழக விஜயத்தின் நோக்கம்தான்.

ஆக, இதில் குறிப்பிட வேண்டிய விடயம் என்னவென்றால் 'ஏக்கிய ராஜ்ஜிய' என்று சொல்லாடலை வைத்துக் கொண்டு, அதைத் திரிவுபடுத்தி, சைக்கிள் அணியினர் தமிழ் மக்களைப் பிழையாக வழி நடத்தித் திருகுதாளம் பண்ணுவதுதான்.

ஆனால் அந்த அரசமைப்பு யோசனை கொண்டுவரப்பட்ட காலத்தில் சம்பந்தன் - சுமந்திரன் இணையுடன் சேர்ந்து முழு அளவில் அதை ஆதரித்து நின்று விட்டு, உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளை அடுத்து பதவிகளைக் கைப்பற்றுவதற்காக சைக்கிள் அணியுடன் சந்தர்ப்பவாத கூட்டு அமைக்க முற்பட்ட சங்குத் தரப்பு, அந்த நேரத்தில் சைக்கிள் தரப்புடன் சேர்ந்து 'ஏக்கிய ராஜ்ஜிய' என்ற சிங்களச் சொல்லாடலை வேண்டுமென்றே தவறாக, பிழையாக மக்களுக்கு அர்த்தப்படுத்தும் சைக்கிள் அணியின் கைங்கரியத்துக்குத் துணை போனது.

அதிலிருந்து இன்னமும் ரெலோ முழுமையாக விலகவில்லை. இரண்டுக்கும் நடுவில் ஒரு இரண்டுங்கெட்டான் திரிசங்கு நிலையில் ரெலோ இருப்பதையே சுரேந்திரனின் இப்போதைய கருத்தாடல் வெளிப்படுத்துகிறது.

'ஏக்கிய ராஜ்ஜிய' என்று அந்த வரைவில் அந்தச் சொல்லாடலுக்குச் சொல்லப்பட்டுள்ள அர்த்தம் தொடர்பிலும் தன்னுடைய நிலைப்பாட்டை வெளிப்படையாகவும் மக்களுக்கு தெளிவுபடுத்தக்கூடிய விதத்திலும் ரெலோ பகிரங்கப்படுத்த வேண்டும். அது தொடர்பில் சைக்கிள் கட்சியின் திரிப்பில் தனக்குள்ள உடன்பாட்டை - அல்லது உடன்பாடின்மையை - அது தெளிவுபடுத்த வேண்டும். தானும் சேர்ந்து கொண்டு வந்த அந்த அரசமைப்பு நகலில் எது அல்லது எவை தனக்கு இப்போது உடன்பாடில்லை என்பதை ரெலோ தமிழ் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். பின்னர் தமிழரசுடன் சேர்ந்து வரக் கூடிய மாகாண சபை தேர்தலை ஓரணியில் எதிர்கொள்ளும் திட்டத்தை அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதனின் விருப்பப்படி முன்னெடுக்கலாம். அதுதான் சரியானது.

'ஆயாராம் காயாராம்' மாதிரி சைக்கிளோடு பதவிக்காக நிற்கும் போது ஒரு விளக்கமும், வீட்டோடு நிற்கும் போது மறு விளக்கமும் என்ற நிலையை மாற்றி, தன் நிலையை ரெலோ தெளிவுபடுத்த வேண்டும். அது அதன் பேச்சாளர் சுரேந்திரனின் பொறுப்பு என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

20 ஆவது வருடத்தில்

# Tamil one TV

*Voice of Tamil Canadians*

# ஒன்றாக முன்னோக்கி

Tamil one TVஇன் பயணத்திற்கு தொடர்ந்து
ஆதரவு வழங்கிவரும் அனைவருக்கும் நன்றி

அடுத்த தசாப்தத்திற்கான பயணத்தில் ஊடக பங்காளர்களாக,

கல்வி | வறுமை ஒழிப்பு | பொருளாதாரம்
அரசியல் | விளையாட்டு | கலை | கலாசாரம்

என்பவற்றில் 'ஒன்றாக முன்னோக்கி' செல்ல நாம் ஒன்றிணைவோம்.

**Vision 2030- ஒன்றாக முன்னோக்கி**

tamil one TV HD | முரசு | வணக்கம் | V தமிழ் | Ceylon MURASU | VTV HD

# கலாபூஷணம் கோகிலா மகேந்திரனின் பவளவிழா நிகழ்வு யாழ்ப்பாணத்தில்!

கலாபூஷணம் கோகிலா மகேந்திரனின் பவளவிழா நிகழ்வுகள் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிறீம் ஹவுஸ்) இடம்பெறவுள்ளது.

மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவர்களால் ஏற்பாடு செய்யப்படும் இந்த நிகழ்வு மங்கள விளக்கேற்றல், நாதசங்கமத்துடன் ஆரம்பமாகவுள்ளன.

தொடக்கவுரையை பேராசிரியர் அ. சண்முகதாசும் ஆசியுரையை கலாநிதி ஆறு.திருமுருகனும், கவிவாழ்த்தை கவிஞர் சோ. பத்மநாதனும், வாழ்த்துரையை ஆளுநர் நா. வேதநாயகனும் வழங்கவுள்ளனர்.



தொடர்ந்து பவளவிழா நூல் வெளியீடும், அதனைத் தொடர்ந்து “போலச் செய்தல்” நடிப்பு அளிக்கையும் இடம்பெறவுள்ளன.

உன்னத ஆளுமையாளராக கோகிலா மகேந்திரன் பெரிதும் வெளிப்படுவது கல்வியலாளராகவே, எழுத்தாளராகவே, உளவியலாளராகவே, நாடகவல்லுநராகவே எனும் பட்டிமண்டபம் பேராசிரியர் சி. சிவலிங்கராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து வான்விளிம்பில் ஒரு நட்சத்திரம் எனும் நாடகமும், கோகிலா மகேந்திரனின் ஏற்புரையும் இடம்பெறும்.

வைத்தியர் சிவரூபியின் நன்றியுரையுடனும் நிகழ்வுகள் நிறைவு பெறும்.

இந்நிகழ்வுக்கு எழுத்தாளர்கள், உளவளத்துணையாளர்கள், கல்வியலாளர்கள், வாசகர்கள், மாணவர்கள் அனைவரையும் பங்கேற்குமாறு பவளவிழா குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



# பத்துளுஓயா பாலம் சேதம்; திருத்துமாறு கோரிக்கை!

**(உடப்பு க.மகாதேவன்)**

புத்தளம் மாவட்டத்திலுள்ள பத்துளு ஓயா, புளிச்சாக்குளம் ரயில் பாலம் அண்மையில் ஏற்பட்ட ‘டித்வா’ புயல் வெள்ளம் காரணமாகச் சேதமடைந்துள்ளது.

இந்தப் பாலம் 1880 ஆம் ஆண்டு பிரிட்டிஸ் அரசால் ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் வடிவமைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இந்த ரயில் பாலமானது கிட்டத்தட்ட 145 வருடங்கள் பழமையானதாகக் காணப்படுகின்றது.

கொழும்பிலிருந்து வரும் ரயில் புத்தளம்வரை இந்த வழியாகவே பயணிகளை ஏற்றிச்செல்வதுண்டு.அன்றாடம் கொழும்புவரைக்கும் அரச வேலைகளுக்குச் செல்லும் பணியாளர்கள் மற்றும் சாதாரண பயணத்தை மேற்கொள்ளும் மக்கள் இதனால் பாதிப்படைந்துள்ளனர்.

எனவே இந்தப் பாலத்தை விரைவில் சீர்செய்து தருமாறு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## நம் சுற்றுச்சூழல் - நம் பொறுப்பு!

பசுமை மயக்கும் பூமித் தாயின் கைகள்,
நம் அக்கறையில் உயிர் வாழும் எல்லாம்,
நதி ஓடும் கீதம், காற்றின் மென்மை,
நம் கவனத்தில் தேவை பாதுகாப்பு!

கடல் அலையால் ஓய்வதில்லை உயிர்,
மரங்கள் பேசும் மொழி நம் காதில்,
காலம் ஓடும் வேகத்தில் மாறி வரும்,
சுற்றுச்சூழல் காத்தல் நம் கடமை!

குப்பை தொங்காது புன்னகை மலர்வோம்,
சிறு முயற்சியில் வாழ்க்கை சிறப்போம்,
நம் கைகளால் பூமி சுகமாக வாழ,
பொறுப்பு ஏற்று முன்னேறுவோம்!



**நடராசா கோபிராம்,**
உளவியல் சிறப்புக்கலை மாணவன்,
யாழ்.பல்கலைக்கழகம்.

# போலிச் செய்திகள் எனும் புலனகப் பேரிடர்!



**சிவபாலன் ரக்ஷனா,**
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

ஒரு தேசத்தின் நம்பிக்கை எரிந்து கொண்டிருக்கிறது. ஒரு காலத்தில் "காகிதப் புலி" என வர்ணிக்கப்பட்ட செய்தித்தாள் வதந்திகள், இன்று இணையத்தின் மின்னல் வேகத்தில் "அணு ஆயுதம்" போல உருவெடுத்து, ஒரு தேசத்தின் இதயத் துடிப்பை, ஒரு நொடியில் திசை திருப்பும் ஆற்றலுடன் செயல்படுகின்றன. இணையம் இன்று தகவல் சுரங்கம் அல்ல, அது திட்டமிட்டுக் கிளப்பப்படும் விஷப்புகைக்கான ஒரு பெரும் தொழிற்சாலையாக மாறியுள்ளது. இலங்கையைப் பொறுத்தவரை, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளின் பின்னணியில், இந்த இணையப் போலிச் செய்திகள் ஒரு புதிய உச்சத்தைத் தொட்டன. பொதுமக்களின் பணப் பாதுகாப்பு, இன நல்லிணக்கம் மற்றும் தேசியப் பாதுகாப்பு ஆகியவற்றை நேரடியாகப் பாதித்த, திட்டமிட்டுப் பரப்பப்பட்ட போலிச்செய்திகள் குறித்த விழிப்புணர்வு எம் அனைவருக்கும் அவசியமானதாகும்.

இதன் அடிப்படையில் இலங்கையில் அண்மைய காலங்களில் பரப்பப்பட்ட போலிச் செய்திகள் குறித்து நோக்குகையில்,

2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நிதி மற்றும் அரசியல் குறித்த அபாயகரமான போலி அறிவிப்புகள் இணையத் தளங்களில் வைரலாகி இருந்தன.

கடன் ஒத்திவைப்பு வதந்தியாக 'மக்களுக்கு வழங்கப்பட்ட கடன்களைத் திருப்பிச் செலுத்த 6 மாத கால அவகாசம் மத்திய வங்கியால் வழங்கப்பட்டுள்ளது' எனப் பொலிவு செய்யப்பட்ட ஒரு போலி சுற்றறிக்கை பரப்பப்பட்டது. FactCheck.lk அறிக்கையின்படி, 2023 மார்ச் 24 அன்று மத்திய வங்கி இதனைத் திட்டவட்டமாக மறுத்தது. இந்த ஒரே ஒரு போலிச் சுற்றறிக்கையைப் பகிர சுமார் 15,000 இற்கும் அதிகமானோர் சமூக ஊடகங்களில் பயன்படுத்தப்பட்டனர்.

இதன் விளைவாக வங்கிக் கிளை சேவைகள் குழப்பமடைந்தன. அத்தோடு நாட்டின் பிரதான நிதி நிறுவனத்தின் மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கை உடனடியாகச் சிதைந்தது.

இதனைப் போன்றதொரு போலிச் செய்தியாக அரசின் விசேட எரிபொருள் விநியோகத் திட்டம் எனும் வகையில் "அடையாள அட்டை விநியோகிக்கப்பட்டு, விசேட எரிபொருள் விநியோகத் திட்டம் ஆரம்பமாகியுள்ளது" என்ற செய்தி பரவியது. அந்தச் சமயத்தில் அரசு தகவல் திணைக்களம் இதனைப் பொய்யான தகவல் என உடனடியாக அறிவித்த போதிலும், நெருக்கடிக்கு மத்தியில் மக்கள் மத்தியில் குழப்பமும், விநியோக நிலையங்களில் தேவையற்ற கூட்டமும் சில நாட்களுக்கு நீடித்தது.

இதனை தொடர்ந்து 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் AI தொழில்நுட்பம் மூலம் இன உணர்வுகளைத் தூண்டுதல் எனும் வகையில் போலி புகைப்படங்கள் பகிரப்பட்டன.

அதாவது செம்மணி மனித எச்சங்கள் குறித்த அகழ்வாராய்ச்சி தொடர்பான நாடாளுமன்ற விவாதத்தில், ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் 'தாயின் கைகளில் குழந்தை இருக்கும்' எலும்புக்கூடு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறினார். அவ்வாறு அவர் ஆதாரமாகக் காட்டிய படங்கள் செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட போலிப் படங்கள் என உறுதிப்படுத்தப்பட்டன. உண்மையான அகழ்வாராய்ச்சிக் குழுக்களின் அதிகாரப்பூர்வ அறிக்கைகள் இந்த கூற்றை முற்றுமுழுதாக மறுத்தன.

இந்தத் தவறான கூற்று சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட ஒரு வார காலப் பகுதிக்குள், இந்தச் சம்பவம் தொடர்பாகப் பகிரப்பட்ட இடுகைகளின் எண்ணிக்கை 20,000 ஐத் தாண்டியது. இது இனங்களுக்கிடையேயான உறவுகளில் மீண்டும் பதற்றத்தை உருவாக்க வித்திட்டு, அரசியல் தளத்தில் உண்மைகளின் தரம் எந்தளவு சீரழிந்துள்ளது என்பதற்கான அபாயகரமான சான்றாகும்.

இதனைப் போலவே 2024 மே மாதம் அநாகரிகமான பொதுச் சுகாதார வதந்திகள் இணையத் தலங்களில் பரவலாகின.

அதாவது "தென்னை எண்ணெயில் ஒரு வகை இரசாயனம் கலக்கப்படுவதாகத் தெரிவித்து இலங்கையில் எண்ணெய்ப் பாவனைக்கு மத்திய சுகாதார அமைச்சு தடை விதித்துள்ளது".

என்றவாறு போலிச்செய்தி ஒன்று வெளியானது. இது குறித்த உண்மைச் சரிபார்ப்பார்க்கயில், சுகாதார அமைச்சின் ஊடகப் பிரிவு இந்தச் செய்தியை மறுத்து, அது முற்றிலும் ஆதாரமற்றது என்று அதிகார பூர்வமாக அறிவித்தது.

இந்த வதந்தியால் பாவனையாளர்கள் மத்தியில் ஒரு வார காலத்துக்குத் தென்னை எண்ணெய் கொள்வனவில் 15% வீழ்ச்சி ஏற்பட்டது என உள்ளூர் விற்பனைப் புள்ளி விவரங்கள் சுட்டுகின்றன. இது பொருளாதார மற்றும் சுகாதாரப் பீதியைத் தூண்டுவதில் போலிச் செய்திகளின் தாக்கத்தைக் காட்டுகிறது.

ஒட்டுமொத்தமாக நோக்குகையில் இலங்கையில் போலிச் செய்திகளின் பரவலுக்குப் பின்னால் இருக்கும் சக்திகள், பொது நிறுவனங்களின் இலச்சினைகள்,




AI தொழில்நுட்பம் மற்றும் பொதுமக்களின் உணர்ச்சி பூர்வமான பிரச்சினைகள் ஆகியவற்றைப் பயன்படுத்துகின்ற திட்டமிட்ட அணுகுமுறையை 2023-2024 இன் புள்ளி விவரங்கள் தெளிவாகக் காட்டுகின்றன. FactCheck.lk, News Cutter மற்றும் பிற உண்மைச் சரிபார்ப்பு நிறுவனங்களின் தரவுகளின்படி, இலங்கையில் பரப்பப்படும் போலிச் செய்திகளில் 65% வீதத்துக்கும் அதிகமானவை அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக நல்லிணக்கம் ஆகியவற்றை நேரடியாகக் குறிவைக்கின்றன. இது வெறும் தகவல் பிழையல்ல, இது ஓர் அடையாளம் தெரியாத உளவியல் போர்.

இந்த அச்சுறுத்தலைச் சமாளிக்க, சட்டங்களை இறுக்குவது மட்டுமே போதாது. ஒவ்வொரு இணையப் பாவனையாளரும், ஒரு செய்தியைப் பகிர்வதற்கு முன் அதன் உண்மை மூலத்தை (Source Authenticity) அதிகாரபூர்வ இணையதளங்களுடன் ஒப்பிட்டுச் சரிபார்க்கும் தனிப்பட்ட ஊடகப் பொறுப்புணர்ச்சியுடன் (Individual Media Responsibility) செயற்பட வேண்டும். இணையத்தின் வேகத்தில் உண்மை சிதறி விடாமல் காப்பது, ஒவ்வொரு குடிமகனின் தேசியப் பணியாகும். இனியும் நம்பாதீர்கள், உண்மை என்னவெனச் சோதித்துப் பாருங்கள்!




# பூநகரி தெளிகரைக் கிராம மக்களுக்கு உதவி வழங்கிய சந்நிதியான் ஆச்சிரமம்

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட பூநகரி பிரதேச செயலக நிர்வாகத்தில் உள்ள, பூநகரி தெளிகரை கிராமத்தில் உள்ள 70 குடும்பங்களுக்கு, 2 லட்சத்து 62 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான அத்தியவசியமான உணவுப் பொருள்கள் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்டன.

இன்று புதன்கிழமை இந்த உதவி வழங்கும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் செ.மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று உதவிகளை வழங்கி வைத்தார்.








# வீதிப் புனரமைப்புப் பணிகள் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பம்

சாவகச்சேரி நகரசபைக்கு உட்பட்ட நகர் வட்டாரத்தில் டச் வீதி புளியடிச் சந்தியில் வெள்ளம் வழிந்தோட முடியாமல் தேங்கி நின்று போக்குவரத்துக்கு பெரும் இடையூறாக உள்ள பகுதி நகரசபையினால் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

குறித்த வீதியின் புனரமைப்பு பணிகளை நகராட்சி மன்றின் உபதவிசாளர் ஞா.கிஷோர், உறுப்பினர் மு.கோகுல்றாஜ் உட்பட வீதியில் வசிப்பவர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர்.

உபதவிசாளர் ஞா.கிஷோரின் முயற்சியின் பயனாக அனர்த்த புனரமைப்பு நிதியில் இருந்து உடனடியாக குறித்த வீதியின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998






# இராணுவத்திடமிருந்து மீட்ட கட்டடத்தை வாடகைக்கு வழங்குவதற்குத் தீர்மானம்!

## காரைதீவு பிரதேச சபை நடவடிக்கை

(நூருல் ஹுதா உமர்)

காரைதீவு பிரதேச சபைக்குச் சொந்தமான இராணுவ முகாம் அமைந்திருந்த காணி பல தசாப்தங்களுக்கு பின்னர் அண்மையில் விடுவிக்கப்பட்டு சபைக்கு உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டுள்ளதால் அங்குள்ள கட்டடத்தை தற்காலிக மதிப்பீடொன்றைப் பெற்று அதனடிப்படையில் கேள்விகள் கோரப்பட்டு கட்டடத்தை வாடகைக்கு வழங்குவதற்கு காரைதீவு பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

காரைதீவு பிரதேச சபையின் 04 ஆவது சபையின் 05 வது மாதாந்த சபைக் கூட்டம் தவிசாளர் சுப்ரமணியம் பாஸ்கரன் தலைமையில் நேற்று நடைபெற்ற போதே இந்த தீர்மானம் சபையில் நிறைவேற்றப்பட்டது.

கடந்த சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு திருத்தம் செய்யப்பட்ட 2026 ஆம் ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட வரவு – செலவுத் திட்டம் 08 உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேறியது.

அத்துடன் 2025 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற மேலதிக பெறுவனவுகளுக்காக தயாரிக்கப்பட்ட குறைநிரப்பு வரவு செலவுத் திட்டத்துக்கு அனுமதி பெறப்பட்டதுடன் வீதி விளக்குகளை இயக்கும் கடமையில் ஈடுபடுத்தப்படும் நபர்களுக்கு மாதாந்த கொடுப்பனவை சபை நிதியில் இருந்து வழங்குவதற்கு சபை அனுமதி பெறப்பட்டது.

மாளிகைக்காடு உப நூலகத்துக்குப் புதிதாக வழங்கப்பட்டுள்ள புத்தகங்களை பாதுகாப்பாக அலுமாரி ஒன்றை கொள்வனவு செய்வதற்கும், மாவடிப்பள்ளியில் புதிதாக இரண்டு இறைச்சிக் கடைகளை நடாத்துவதற்கும் பதிலீட்டு அடிப்படையில் கடமையாற்றிவரும் ஊழியரின் சேவைக் காலத்தினை மேலும் 06 மாதங்களுக்கு நீடிப்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும் சபையின் அனுமதி பெறப்பட்டது.

சபையின் செயலாளராக கடமையாற்றும் அ.சுந்தர குமார் விரைவில் ஓய்வு பெற்றுச் செல்லவுள்ளார். இந்த நிலையில் ஓய்வுக்கான முன் விடுமுறை கோரி விண்ணப்பித்துள்ள நிலையில் பதில் செயலாளராக திருமதி வனிதா டேவிட் அமிர்தலிங்கத்தை நியமிப்பதற்கு சபை அனுமதி வழங்கியது. இதன்போது உறுப்பினர்கள் பலரும் பல்வேறுபட்ட மக்களின் பிரச்சினைகளை சபைக்கு முன்வைத்து உரையாற்றினர்.




# ஆரம்ப கல்வி இணைப்பாளருக்கு பாராட்டு!




(றிபாஸ்)

அக்கரைப்பற்று கல்வி வலயத்துக்கு உட்பட்ட பொத்துவில் கல்விக் கோட்டத்தில் ஆரம்பக் கல்விப் பிரிவின் இணைப்பாளர் கடமையாற்றிய ஏ.எம். தாஜ்தினுக்கான பணி நயப்பு விழா வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம் பெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம். றஹ்மத்துல்லா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பீ.டி.சீ.ரீ முகாமையாளர், விரிவுரையாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு பணி நயப்பு பெற்ற ஏ.எம். தாஜ்தினின் சேவையைப் பாராட்டி பொன்னாடை, நினைவுச் சின்னம் என்பன வழங்கிக் கௌரவித்தனர்.



# பாடசாலைகளது சுற்று சூழலில் நுளம்பைக் கட்டுப்படுத்தப் புகை!

(றிபாஸ்)

நாட்டில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தம் காரணமாக பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டு மீளவும் திறப்பதை முன்னிட்டு பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி உவைஸ் பாறூக் வழிகாட்டலின் கீழ் புகை விசிறும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பொத்துவில் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர்களும், நுளம்புக் கட்டுப்பாட்டு உதவியாளர்களும் இணைந்து நுளம்புத் தாக்கத்திலிருந்து மாணவர்களை பாதுகாக்கும் நோக்கில் பாடசாலைகளின் சுற்றுச் சூழல்களைத் துப்பரவு செய்து நுளம்புகளை கட்டுப்படுத்தும் புகை விசிறும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.






# அனர்த்த மீட்பு நிவாரணப் பணிக்கு பிரதமரிடம் காசோலை வழங்கல்!

(றிபாஸ்)

அரசின் அனர்த்த மீட்பு நிதியத்துக்கு ஐ.டி.எம்.எம்.சி. சர்வதேச தனியார் கல்வி நிறுவனத்தால் நிதியுதவி வழங்கி வைக்கப்பட்டது.

இதற்கான காசோலை பிரதமரிடம் கையளிக்கப்பட்டது.

கல்லூரியின் தவிசாளரும், ஜனனம் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி விநாயகமூர்த்தி ஜனகனின் தாயார் ரூபி விநாயகமூர்த்தி இரண்டு மில்லியன் ரூபா பெறுமதியான காசோலையைப் பிரதமரிடம் வழங்கி வைத்தார்.

# அரச ஊழியர்களுக்கு ஒரு மாத சம்பளத்தை அரசு நிவாரணமாக வழங்குதல் வேண்டும்

## ஜனநாயக முன்னணித் தலைவர் கோரிக்கை

(றிபாஸ்)

நாட்டில் ஏற்பட்டுள்ள அனர்த்தங்களில் அரச ஊழியர்களும் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதால் அரச ஊழியர்களுக்கும் ஓய்வூதியக்காரர்களுக்கும் மீளச் செலுத்த முடியாத ஒரு மாத சம்பளத்தை நிவாரணமாக அரசு வழங்க வேண்டும் என்று இலங்கை ஜனநாயக முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் ஏற்பட்டுள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான நிவாரணங்கள் மற்றும் மாற்று ஏற்பாடுகள் வழங்குவது தொடர்பில் இலங்கை ஜனநாயக முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னணியின் தலைவர் ஏ.பி. கமால்தீன் ஒப்பமிட்டு வெளியிட்டுள்ள அந்ம அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரச ஊழியர்கள் தங்களது வீடுகள், உடைமைகளை இழந்தும் புயலாலும் வெள்ளத்தாலும் பல்வேறு விதமான பாதிப்புகளை எதிர் நோக்கியுள்ளனர். மேலும் அரச அலுவலகங்களுக்கு கஷ்டத்துக்கு மத்தியில் போக்குவரத்து செய்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சேவைகளை வழங்குவதற்காக தங்களை அர்ப்பணித்து வருகின்றார்கள்.



இந்நாடு கடந்த காலங்களில் எதிர்கொண்ட அனர்த்தங்கள், சேதங்களை விட இவ்வருடம் சந்தித்த இயற்கையின் அழிவுகள் அதனால் ஏற்பட்ட சேதங்கள் வரலாற்றில் ஒருபோதும் சந்திக்காத அழிவுகளாகக் கருதப்படுகின்றது.

நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் வாழும் மக்கள் இந்த அனர்த்தத்தால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்தங்களால் உயிர்கள், வாழிடங்கள், உடைமைகளை இழந்து பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகின்ற மக்களையும் இந்த நாட்டையும் மீளக் கட்டி எழுப்புவதற்காக அரச ஊழியர்கள் ஆற்றி வரும் பணி மகத்தானது.

இரவு பகல் மற்றும் மழை வெள்ளம் பாராது அனர்த்தங்களுக்குள் சிக்கி இன்னல்களை அனுபவிக்கும் மக்களையும் இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கும் அவர்களது வாழ்வியலை மீளக் கட்டி எழுப்பவும் அரச ஊழியர்கள் மேற்கொள்ளும் கடமைகளை இந்த நாட்டு மக்களும் அரசும் சாதாரணமாகக் கருதி விட முடியாது.

இவ்வாறான அழிவுகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அரசு முன்வைத்துள்ள நிவாரணங்களை உரியவர்களுக்குக் கொண்டு சேர்ப்பதிலும் பாதிக்கப்பட்ட மக்கள் விடுபடாமல் அவர்களுக்கான உதவிகள் கிடைக்கப்பெற வேண்டும் என்பதிலும் அரச ஊழியர்களின் சேவை மிக முக்கியமானது.

இதனால் இந்த மக்களுக்கான துயர் துடைத்து அவர்களுக்கு உரிய உதவிகளும் நிவாரணங்களும் முறைப்படி சேர வேண்டும் என்பதற்காக பணியாற்றி வரும் அரச ஊழியர்களுக்கும் அரசு வெகுமதிகளையும் நிவாரணங்களையும் வழங்க வேண்டிய கடமை இருக்கிறது.

இதற்கமைய அரச ஊழியர்களுக்கு மீளச் செலுத்த முடியாத ஒரு மாதச் சம்பளத்தை நிவாரணமாக வழங்கி, மன உளைச்சலுக்கும் தியாகங்களுக்கும் மத்தியில் செயலாற்றுகின்ற அரச ஊழியர்களுக்கும் சலுகைகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றுள்ளது.

# முல்லையில்கடத்ததயாராகவிருந்த ரூ.3 கோடி பெறுமதியான கஞ்சா மீட்பு!

## சந்தேக நபர் தப்பியோட்டம்



(பா.சதீசன்)

முல்லைத்தீவு சாலை கடற்கரை பகுதியில் கஞ்சா பொதி கடத்தத் தயாராக இருந்த நிலையில் முல்லைத்தீவு கடற்படையினர், விஷேட அதிரடிபடையினரால் மீட்கப்பட்டுள்ளது.

3 கோடி ரூபா பொறுமதியான கஞ்சா இவ்வாறு மீட்கப்பட்ட சம்பவம் இன்று இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு சாலை கடற்கரை பகுதியில் கஞ்சா பொதி கடத்தப்பட இருப்பதாக முல்லைத்தீவு கடற்படைக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலை அடுத்து முல்லைத்தீவு விஷேட அதிரடிபடையினர் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையில் சாலை கடற்கரை பகுதியில் மகேந்திரா கப் ரக வாகனத்தில் வைத்து 140 கிலோ 460 கிராம் கேரளா கஞ்சா மீட்கப்பட்டது. சந்தேக நபர் தப்பியோடியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், குறித்த நபரை கைது செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மீட்கப்பட்ட கஞ்சா பொதி மற்றும் கப் ரக வாகனம் ஆகியன முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.



# காட்டுப் பன்றியுடன் மோதி விபத்துக்குள்ளானது ஓட்டோ!

(உடப்பு க.மகாதேவன்)

அதிக வேகத்தில் பயணித்த ஓட்டோ ஒன்று, காட்டுப் பன்றியுடன் மோதி விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்த இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் ஹட்டன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹட்டன் – நுவரெலியா பிரதான வீதியில், மல்லிப்பு சந்திக்கு அருகில் நேற்று நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

கினிகத்தேனை பகுதியிலிருந்து கொட்டகலை பகுதியை நோக்கிப் பயணித்த ஓட்டோவே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஓட்டோ அதிக வேகத்தில் பயணித்துள்ளதாகவும் இதன்போது வீதியின் குறுக்கே பாய்ந்த காட்டுப் பன்றியின் மீது மோதியுள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த விபத்தில் ஓட்டோவுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. காயமடைந்தவர்களைப் பொலிஸாரும், வீதியில் பயணித்தவர்களும் இணைந்து மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ். பழைய பூங்கா மரபுரிமை சொத்தாக பேணிப் பாதுக்கப்படவேண்டியது அவசியம்

## இயற்கை நண்பர்கள் இயக்கம் ஆளுநர், மாநகர முதல்வரிடம் கோரிக்கை

(த.சுபேசன்)

யாழ்ப்பாணம் பழைய பூங்கா மரபுரிமைச் சொத்தாக பேணிப் பாதுக்கப்படவேண்டும் என்று இயற்கை நண்பர்கள் இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக இயற்கை நண்பர்கள் அமைப்பு ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்,

தாவரவியல் பரிமாணம், அரிதாகிச் செல்லும் பாரம்பரிய முதுமரங்களைப் பாதுகாக்க வேண்டும் என்பது உலகில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மரபுரிமை நடைமுறைகளில் ஒன்று.

யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் வானளாவ வளர்ந்து நிற்கும் முது மரங்கள் பல யாழ்ப்பாணத்தில் இப்பொழுது உயிருடன் இருக்கும் எல்லோரையும் விட, வயதில் மூத்தவை. வாகன நெரிசல் மிக்க யாழ்.நகரின் கரிக்காற்றை உறிஞ்சிச் சுத்தம் செய்யும் காபன் வடிகட்டியாக பழைய பூங்காவில் உள்ள மரங்கள் செயற்பட்டு வருகின்றன.



அபிவிருத்திச் செயற்பாடுகளின் போது இயற்கையைப் பாதிக்காத வகையில் குறிப்பாக முதுமரங்களைப் பேணிப் பாதுகாப்பது என்பது உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபுரிமை நடைமுறை.

போர்க் காலத்திலேயே பராமரிக்கப்பட்ட ஒரு மரபுரிமைப் பிரதேசத்தை அபிவிருத்தியின் பெயரால் அழித்துச் செய்யும் செயற்பாடு அனைத்தும் பண்பாட்டு இன அழிப்பு என்பதாகவே பலரால் கூறப்படுகின்றது. இது தொடர்பாக இயற்கையை நேசிப்பவர்கள் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

தற்போது உள்ள தலைமுறையைவிட வயதால் மூத்த அந்த மரங்களை வெட்டுவதை மௌனமாக இருந்து ஆதரித்து தமது வேர்களைப் பாதுகாக்க முடியாத ஒரு மக்கள் கூட்டம் திரண்டு ஒரு தேசமாக நிமிரமுடியாது.

எனவே மரபுரிமைச் சொத்துக்களை பேணிப் பாதுகாக்க வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் யாழ். மாநகர சபையின் முதல்வர் ஆகியோர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.– என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஊரக வேலை உறுதித் திட்ட மசோதா தாக்கல்: மக்களவையில் எதிர்க்கட்சிகள் கடும் அமளி




காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க் கட்சிகளின் அமளிக்கு இடையில் புதிய ஊரக வேலை உறுதி திட்ட மசோதா இந்திய மக்களவையில் நேற்று தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த 2005 ஆம் ஆண்டு காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தை (எம்.ஜி.என்.ஆர்.இ.ஜி.ஏ) அமுலுக்கு கொண்டு வந்தது. கிராமப்புற மக்களுக்கு வாழ்வாதாரம் அளிக்கும் வகையில் இந்த திட்டம் கொண்டுவரப்பட்டது. இதன்படி, ஆண்டுக்கு 100 நாள்களுக்கு வேலை வழங்கப்பட்டு வருகிறது.

இந்த சூழலில் இந்த திட்டத்தின் பெயரை, 'விக் ஷித் பாரத் கேரன்ட்டி பார் ரோஜ்கர் அண்ட் அஜீவிகா மிஷன் (கிராமின்) (வி.பி-ஜி ராம்-ஜி)' என பெயர்மாற்ற மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இது தொடர்பான மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை கடந்த வாரம் ஒப்புதல் வழங்கியது. இதற்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில், புதிய ஊரக வேலை உறுதி திட்ட (வி.பி-ஜி ராம் ஜி) மசோதாவை மத்திய வேளாண் துறை அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் மக்களவையில் நேற்று தாக்கல் செய்தார். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்துக்கு (எம்ஜிஎன்ஆர்இஜிஏ) மாற்றாக இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டது. முன்னதாக, காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவையின் மையப் பகுதிக்குச் சென்று, மகாத்மா காந்தி பெயரில் உள்ள திட்டத்தின் பெயரை மாற்ற எதிர்ப்பு தெரிவித்து கோஷம் எழுப்பினர்.

நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணைக்கு அனுப்பவேண்டும் என்றும் வலியுறுத்தினர். ஆனால் கடும் அமளிக்கு இடையில் அமைச்சர் அந்த மசோதாவை தாக்கல் செய்தார்.

இதுகுறித்து சிவராஜ் சிங் சவுகான் கூறும்போது, "மகாத்மா காந்தி எங்கள் இதயங்களில் வாழ்கிறார். மிகவும் ஒடுக்கப்பட்டவர்களின் நலன் தலையாய முன்னுரிமையாக இருக்க வேண்டும் என்பது காந்திஜி மற்றும் பண்டிட்தீன்தயாள் ஆகிய இருவரின் முன்னுரிமையாக இருந்தது. நாங்கள் அவர்களின் கொள்கைகள் மீது மிகுந்த மரியாதை வைத்திருக்கிறோம். அத்துடன் அவர்களது கொள்கைகளின் அடிப்படையில் பல வறுமை ஒழிப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம்." என்றார்.

இதுகுறித்து காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி கூறும்போது,

"மகாத்மா காந்தி என் குடும்பத்தைச் சேர்ந்தவர் அல்ல. ஆனால் அவர் என் குடும்ப உறுப்பினரைப் போன்றவர். இது ஒட்டுமொத்த நாட்டின் உணர்வுப்பூர்வமான விஷயம். இந்த மசோதாவை நாடாளுமன்ற நிலைக் குழு பரிசீலனைக்கு அனுப்ப வேண்டும்." - என்றார்.

புதிய மசோதாவுக்கு எதிராக நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள காந்தி சிலை முன்பு எதிர்க்கட்சிகள் சார்பில் போராட்டம் நடைபெற்றது. இதில், காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி, சமாஜ்வாதி தலைவர் அகிலேஷ் யாதவ், திமுக எம்.பி. டி.ஆர்.பாலு உள்ளிட்டோர் மகாத்மா காந்தியின் புகைப்படத்தை கையில் ஏந்தியபடி பங்கேற்றனர்.

# வாராணசி மடங்கள், கோயில்களுக்கு வரி விதிக்க துறவிகள் கடும் எதிர்ப்பு



வாராணசியில் மடங்கள், கோயில்களுக்கு வரி விதிப்புக்கு துறவிகள் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

உத்தர பிரதேச மாநிலம் வாராணசியில் காசி விஸ்வநாதர் உள்ளிட்ட பல முக்கியமானக் கோயில்கள் உள்ளன. இவற்றில் பல்வேறு பிரிவுகளின் துறவிகளுக்கான மடங்கள், தர்ம சத்திரங்களும் உள்ளன. இவை அனைத்துக்கும் வாராணசி மாநகராட்சி வரி வசூலிக்கிறது.


வரி பாக்கி தொடர்பாக மாநகராட்சி கால அவகாசத்துடன் நோட்டீஸ் அளித்திருந்தது. வரி செலுத்தாதவர்களுக்கு பறிமுதல் அறிவிப்பும் ஒரிரு நாள்களுக்கு முன்னர் வழங்கப்பட்டது. இதற்கு துறவிகளும், மடங்களின் தலைவர்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

வாராணசி பாதாளபுரி மடத்தின் தலைவர் ஜகத்குரு பாலக தேவாச்சார்யா கூறுகையில், "எங்கள் மடத்துக்கு 2 லட்சம் இந்திய ரூபாவுக்கு அதிமான வரி நிலுவை இருப்பதாக கூறி பறிமுதல் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது." என்றார்.

சித்தா பீடம் ஜாகேஷ்வர் மகாதேவ் கோயில் மடத்துக்கும் 65,000 இந்திய ரூபாவுக்கு மேல் வரி செலுத்த நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. அந்த மடத்தின் தலைமைஅர்ச்சகர்சுவாமிமதுர்கிருஷ்ணாவும் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

"வரி செலுத்தாவிட்டால் பறிமுதல் என அச்சுறுத்துவது தவறு" என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், துறவிகள் ஒன்று கூடி ஆலோசனை கூட்டம் நடத்தினர். இக்கூட்டத்தில், உ.பி. அரசின் நடவடிக்கையை அவுரங்கசீப் ஆட்சிக் காலத்தின் ஜசியா வரிக்கு ஒப்பிட்டு தீர்மானம் நிறைவேற்றி உள்ளனர்.





# 'பென்டானில்' வலி நிவாரண மருந்தை பேரழிவு ஆயுதமாக அறிவித்தார் ட்ரம்ப்

"பென்டானில்" என்ற வலி நிவாரண மருந்தை பேரழிவு ஆயுதம் என வகைப் படுத்தி அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உத்தரவிட்டார்.

பென்டானில் என்பது செயற்கை முறையில் தயாரிக்கப்படும் வலி நிவாரணி மருந்து.

இது மருத்துவ உலகில் ஒருபுறம் முக்கிய மருந்தாக உள்ளது. மறுபுறம் தவறாகவும் பயன்படுத்தப்படும்போது, உயிரைப் பறிக்கும் கொடிய போதைப் பொருளாக மாறுகிறது.

அமெரிக்காவில் 18 முதல் 45 வயதுக் குட்பட்டோரின் மரணத்துக்கு, பென்டானில் போதைப் பொருளைப் பயன்படுத்தியது ஒரு முக்கிய காரணமாக கூறப் படுகிறது.


இம்மருந்து பெரும்பாலும், தென் அமெரிக்க நாடான மெக்சிகோ வழியாக அமெரிக்காவுக்குள் கடத்தப்படுவதாகவும், அதற்கான மூலப்பொருட்கள் சீனாவிலிருந்து வருவதாகவும் அமெரிக்கா குற்றஞ்சாட்டி வருகிறது.

இதையடுத்து, இம்மருந்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில், ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், பென்டானிலை ஒரு பேரழிவு ஆயுதம் என வகைப்படுத்தும் நிர்வாக உத்தரவில் கையெழுத்திட்டார்.

அதைத் தொடர்ந்து, "பென்டானில் ஒரு போதைப் பொருள் என்பதைத் தாண்டி அது ஒரு வேதியியல் ஆயுதம் போன்றது. வெறும் 2 கிராம் பென்டானில் ஒரு மனிதனை கொல்லப் போதுமானது என்பதால், இது பேரழிவு ஆயுதமாகக் கருதப்படுகிறது. எந்த ஒரு குண்டும் செய்யாத சேதத்தை இந்த நச்சு பொருள் செய்து வருகிறது. ஆண்டுக்கு, 2 முதல் 5 இலட்சம் மக்கள் இதனால் மரணமடைகின்றனர்" என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

# பிரதமர் மோடிக்கு எத்தியோப்பியாவின் மிக உயரிய விருது வழங்கிக் கௌரவிப்பு





ஆபிரிக்க நாடான எத்தியோப்பியாவின் மிக உயரிய 'கிரேட் ஹானர் நிஷான் ஆப் எத்தியோபியா' விருதினை பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கி அந்நாட்டு பிரதமர் அபி அகமது அலி கௌரவித்துள்ளார்.

அரசு முறைப் பயணமாக ஜோர்டான் சென்ற பிரதமர் நரேந்திர மோடி அந்த பயணத்தை முடித்துக்கொண்டு அங்கிருந்து ஆபிரிக்க நாடான எத்தியோப்பியாவுக்குச் சென்றார். அந்நாட்டுப் பிரதமர் அபி அகமது அலி, பிரதமர் மோடியை விமான நிலையத்துக்கே வந்து வரவேற்றார். இதையடுத்து, அடிஸ் அபாபாவில் உள்ள அறிவியல் அருங்காட்சியகத்துக்கு இருவரும் ஒரே காரில் சென்றனர். காரை, எத்தியோப்பியா பிரதமர் ஓட்டிச் சென்றார்.

இதையடுத்து, இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையே இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக, எத்தியோப்பியாவின் மிக உயரிய 'கிரேட் ஹானர் நிஷான் ஆப் எத்தியோபியா' விருதினை பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கி அபி அகமது அலி கவுரவித்தார்.

அப்போது பேசிய பிரதமர் மோடி, "எத்தியோப்பியாவின் மிக உயர்ந்த சிவிலியன் விருது எனக்கு வழங்கப் பட்டுள்ளது. உலகின் மிகவும் பழமையான மற்றும் வளமான நாகரிகங்களில் ஒன்றால் கவுரவிக்கப்படுவது எனக்கு மிகுந்த பெருமைக்குரிய விஷயம். அனைத்து இந்தியர்கள் சார்பாக இந்த மரியாதையை நான் மிகுந்த பணிவுடனும் நன்றியுடனும் ஏற்றுக் கொள்கிறேன்." என தெரிவித்தார்.

பின்னர் இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "எத்தியோப்பியாவின் மிக உயரிய விருதை வழங்கிய எத்தியோப்பிய மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் பிரதமர் அபி அகமது அலிக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். வளர்ந்து வரும் உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதற்கும் புதிய வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் எத்தியோபியாவுடனான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கும் இந்தியா உறுதி பூண்டுள்ளது." எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விருதைப் பெறும் முதல் வெளிநாட்டுத் தலைவர் பிரதமர் மோடி என்பது குறிப்பிடத்தக்கது. வெளிநாடுகளில் பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்ட விருதுகளில் இது 28 ஆவது விருதாகும்.

கனடா முரசு

பக்கங்கள் - 03

புதன்கிழமை 17/12/2025

## வானிலை தொடர்பில் கனடாவில் எச்சரிக்கை



C3



# தெற்காசிய மக்கள் தொகை கனடாவில் 4 மடங்கு உயர்வு

**கனடாவில் தெற்காசிய மக்கள் தொகை நான்கு மடங்கு வளர்ச்சி அடைந்துள்ளது.**

**கனடாவில் தெற்காசிய மக்கள் தொகை கடந்த 25 ஆண்டுகளில் அதிரடி வளர்ச்சியை கண்டுள்ளது.**

**1996 இல் 6.69 லட்சம் பேர் இருந்த நிலையில், 2021 இல் அது 2.6 மில்லியனாக உயர்ந்துள்ளது.**

**அதாவது தெற்காசிய மக்கள் கிட்டத்தட்ட கனடாவின் மிகப்பெரிய இனக்குழுவாக மாறியுள்ளனர். தற்போது கனடாவின் மொத்த மக்கள் தொகையில் 7.1 சதவீதம் பங்கு வகிக்கின்றனர்.** C2



# சளிக்காய்ச்சலினால் 3 குழந்தைகள் மரணம்

கனடாவில் சளிக்காய்ச்சல் காரணமாக மூன்று குழந்தைகள் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவின் ஒட்டாவா மற்றும் கிழக்கு ஒன்டாரியோ பகுதிகளில் இந்த மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில் இன்ஃப்ளுயன்சா A (Influenza A) தொடர்பான சிக்கல்களால் மூன்று குழந்தைகள் உயிரிழந்துள்ளனர் என ஒட்டாவா பொதுச் சுகாதார அலுவலகம் தெரிவித்துள்ளது.

திங்கட்கிழமை காலை வெளியிடப்பட்ட அறிக்கையில், 5 முதல் 9 வயதுக்குட்பட்ட இந்த குழந்தைகள் ஒட்டாவா மற்றும் கிழக்கு ஒன்றாரியோ நிர்வாகப் பகுதிகளில் உயிரிழந்தன என குறிப்பிட்டுள்ளது.

மேலும், இன்ஃப்ளுயன்சா A தொற்றுகளில் “வேகமான மற்றும் கணிசமான அதிகரிப்பு” பதிவாகி வருவதாகவும் சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

ஆறு மாதங்களுக்கும் மேற்பட்ட அனைவரும் மிக விரைவாக காய்ச்சல் தடுப்பூசி பெற வேண்டும் என மருத்துவ அதிகாரிகள் பரிந்துரைத்துள்ளனர்.

“காய்ச்சல் கடுமையான நோய்களையும், மருத்துவமனை சிகிச்சை தேவைப்படும் சிக்கல்களையும் உருவாக்கக்கூடும் என்பதற்கான தெளிவான நினைவூட்டலே இது” என ஒட்டாவா பொதுச் சுகாதார அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஒட்டாவாவின் குழந்தைகள் மருத்துவமனையான கிழக்கு ஒன்றாரியோ சிறுவர் மருத்துவமனையில் டிசம்பர் மாதத்தில் வழக்கத்தை விட அதிக எண்ணிக்கையிலான காய்ச்சல் நோயாளிகள் பதிவாகியுள்ளதாக தெரிவித்துள்ளது.

நத்தார் பண்டிகை இன்னும் இரண்டு வாரங்களில் வரும் நிலையில், மக்கள் அனைவரும் விடுமுறைக்கு முன் தடுப்பூசி பெறுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

“தடுப்பூசி முழு செயல்திறன் பெற சுமார் இரண்டு வாரங்கள் ஆகும். இப்போது தடுப்பூசி பெறுவது விடுமுறை காலத்தில் பாதுகாப்பை வழங்கும்” என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.




# அமெரிக்காவில் கைது செய்யப்படும் கனடியர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

அமெரிக்காவில் கைது செய்யப்படும் கனடியர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் அமெரிக்க குடிவரவு அதிகாரிகளால் (ICE) கைது செய்யப்படும் அல்லது தடுப்புக் காவலில் வைக்கும் கனடியர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளதாக புதிய அரசு தரவுகள் தெரிவிக்கின்றன.

2025 ஜனவரி மாதத்தின் பின்னர் மட்டும் 200-க்கும் அதிகமான கனடியர்கள் அமெரிக்க குடிவரவு அதிகாரிகளின் காவலில் இருந்துள்ளனர்.

2024 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 137 ஆக காணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. , 2023 செப்டம்பர் முதல் 2025 அக்டோபர் நடுப்பகுதி வரை 434 முறை கனடியர்கள் அமெரிக்க தடுப்புக் காவ




லில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதில் இரண்டு வழக்குகள் தீவிர குற்றங்களுடன் தொடர்புடையவை ஆறு பேருக்கு பிற குற்றச்சாட்டுகள் இருந்தன.

பெரும்பாலானவர்கள் எந்தவிதமான தீவிர குற்றப் பதிவும் இல்லாதவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அதிகரிப்பு, குற்றச்செயல்கள் அதிகரித்ததன் விளைவு அல்ல மாறாக அமலாக்கத்தில் ஏற்பட்ட அடிப்படை மாற்றமே காரணம் என குயின்ஸ் பல்கலைக்கழக சட்ட பீடப் பேராசிரியர் ஷாரி ஐக்கன் தெரிவித்துள்ளார்.

வன்முறை குற்றங்கள் செய்தவர்களைப் பற்றி நாம் பேசவில்லை. மிகச் சிறிய சட்ட மீறல்களே இப்போது அமெரிக்க அமலாக்க அமைப்புகளின் கவனத்திற்கு வர காரணமாகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தெற்காசிய...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த 2041-க்குள் இந்த எண்ணிக்கை 47 லட்சம் முதல் 65 லட்சம் வரை அதிகரிக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. அதாவது, கனடாவின் மக்கள் தொகையில் 12.5 சதவீதம் வரை தெற்காசியர்கள் இருப்பார்கள்.

இதில் இந்தியா மிகப்பெரிய பங்களிப்பை வழங்குகிறது, சுமார் 44 சதவீதம் இந்தியாவில் பிறந்தவர்கள்.

பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், கயானா, டிரினிடாட் ரூ டொபாகோ போன்ற நாடுகளிலிருந்தும் பெருமளவானோர் குடிபெயர்ந்துள்ளனர்.

25 - 54 வயதுக்குள் உள்ள தெற்காசியர்களில் 58 சதவீதம் பேர் பட்டப் படிப்பு அல்லது அதற்கு மேல் கல்வி பெற்றுள்ளனர். இது கனடாவின் பிற இனக்குழுக்களை விட அதிகம்.

இதனால் தொழில்நுட்பம், சுகாதாரம், நிதி, தொழில் முனைவோர் துறைகளில் அவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

சுமார் 45 சதவீதம் பேர் குழந்தைகளுடன் இரண்டு பெற்றோர்களும் கொண்ட குடும்பமாக வாழ்கின்றனர். மேலும் 20 சதவீதம் பேர் பல தலைமுறைகளை கொண்ட குடும்பங்களில் வசிக்கின்றனர். இது சமூக உறுதியை அதிகரிக்கிறது.

தமிழ், பஞ்சாபி, ஹிந்தி, உருது, குஜராத்தி உள்ளிட்ட பல மொழிகள், திருவிழாக்கள், ஊடகங்கள், வணிகங்கள் ஆகியவற்றின் மூலம் கனடாவின் பன்முகத்தன்மையை வளப்படுத்துகின்றனர்.

பெண்களின் வேலை வாய்ப்பு, வீட்டு வசதி, மொழி ஆதரவு போன்ற துறைகளில் அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர்.

தெற்காசியர்கள் கனடாவின் சமூக, பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்காற்றுவார்கள்.



# வானிலை தொடர்பில் கனடாவில் எச்சரிக்கை

கனடா முழுவதும் குளிர்கால வானிலையின் கலவையான தாக்கம் எதிர்பார்க்கப்படுவதால், 10 மாகாணங்களில் 6 மாகாணங்களிலும், 3 பிரதேசங்களில் 2 பிரதேசங்களிலும் வானிலை எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

நியுபவுன்ட்லாந்த் என்ட் லாப்ராடர், நோவா ஸ்கோஷியா, பிரின்ஸ் எட்வர்ட் தீவு மற்றும் கியுபெக் ஆகிய இடங்களில் கடுமையான வானிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் அல்பேர்ட்டா, பிரிட்டிஷ் கொலம்பியா, யுகோன் மற்றும் வடமேற்கு பிராந்தியம் ஆகிய இடங்களிலும் வானிலை எச்சரிக்கைகள் நடைமுறையில் உள்ளன.

நியூஃபவுண்ட்லாந்து மற்றும் லாப்ரடோர் கடற்கரை பகுதிகளில் "பனிப்புயல் போன்ற சூழ்நிலைகள்" ஏற்படலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

மிக மோசமாக பாதிக்கப்படும் பகுதிகளில் 40 சென்றி மீற்றருக்கும் அதிகமான பனிப்பொழிவு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

நியூஃபவுண்ட்லாந்தின் வடக்கு பகுதிகள் ஆரஞ்சு நிற குளிர்கால புயல் மற்றும் காற்று எச்சரிக்கைகளின் கீழ் உள்ளன.

கிழக்கு மற்றும் வடகிழக்கு கடற்கரைகளில் கடல் அலைகள் மற்றும் புயலினால் கரையோர வெள்ளம் ஏற்படலாம் என்றும் முன்னறிவிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நோவா ஸ்கோஷியாவின் வடகிழக்கு பகுதிகளில் குளிர்கால புயல் எச்சரிக்கைகள் அமலில் உள்ளன. இடத்தைப் பொறுத்து 5 முதல் 40 சென்றி மீற்றர் வரை பனிப்பொழிவு எதிர்பார்க்கப்படுகிறது.

# குவாண்டம் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு கனடா அரசு 92 மில்லியன் டொலர் நிதியுதவி





கனடா அரசு, நாட்டின் முன்னனி குவாண்டம் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு 92 கனேடிய டொலர் (67 USD) நிதியுதவியை அறிவித்துள்ளது.

செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் டிஜிட்டல் புதுமை அமைச்சர் எவன் சாலமோன், " கனடாவின் திறமையான குவாண்டம் ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் அமெரிக்காவிற்கு செல்லாமல், நாட்டிலேயே வளரவேண்டும்" என்ற நோக்கத்துடன் இந்த உதவி வழங்கப்படுவதாக கூறியுள்ளார்.

Xanadu Quantum Technologies – விரைவில் Nasdaq மற்றும் Toronto Stock Exchange-ல் 3.6 பில்லியன் டொலர் மதிப்பீட்டுடன் பங்கு சந்தையில் வரவிருக்கும் நிறுவனம்.

Anyon Systems, Nord Quantique, Photonic – இந்த நிறுவனங்கள் மூன்றையும், அமெரிக்காவின் DARPA (Defence Advanced Research Projects Agency) முன்பு ஆர்வத்துடன் அணுகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

Xanadu நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் CEO கிரிஸ்டியன் வீட்ப்ரூக், "அமெரிக்காவில் இருந்து பணமும் திறமையும் ஈர்க்கும் அழுத்தம் எப்போதும் இருந்தது. ஆனால் கனடா அரசின் இந்த நிதியுதவி, நாங்கள் இங்கேதான் தொடர வேண்டும் என்பதற்கான வலுவான காரணமாக உள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிதியுதவி, கனடா அரசின் 334 மில்லியன் கனேடிய டொலர் மதிப்பிலான 5 ஆண்டு திட்டத்தின் ஒரு பகுதியாகும். இதன் மூலம், நாட்டின் குவாண்டம் துறையை வலுப்படுத்தி, உலகளாவிய போட்டியில் முன்னிலை பெறுவதே இலக்கு.

மேலும், கனடாவில் பணவீக்கம் 2.2 சதவீதம் என்ற நிலையான அளவில் உள்ளது. உணவுப் பொருட்களின் விலை (பழம், மாட்டிறைச்சி, கோப்பி) அதிகரித்தாலும், மொத்த பொருளாதார நிலைமை சீராக உள்ளது.

இந்த அறிவிப்பு, கனடாவின் தொழில்நுட்ப வளர்ச்சி, வேலை வாய்ப்பு மற்றும் உலகளாவிய போட்டித் திறனை மேம்படுத்தும் முக்கியமான படியாகக் கருதப்படுகிறது.